திரு எச். எம். ராஜு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 39,40,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27.4.1994) காலை 10.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 9.12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

115. கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

116. கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

117. கோரிக்கை எண் 49 - நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

1994 ஏப்ரல் 26]

118. கோரிக்கை எண் 44 - காட்டு வளத்துறை மற்றும் கோரிக்கை எண் 58 - காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

119. கோரிக்கை எண் 30 - ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

120. ஊரக வளர்ச்சி பற்றிய செயலாக்க வரவு - செலவுத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

121. பேரூராட்சிகள் நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை பற்றிய செயலாக்க வரவு - செலவுத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

122. நகராட்சி நிருவாகமும் மாநகராட்சிகளும் பற்றிய செயல்திறன் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

123. காட்டுவளத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1994-95. (ஆங்கிலம்)

124. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1994-95. (ஆங்கிலம்)

125. அரசு உறுதி மொழிக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1993-94.

TRUTH ALONE TRIUMPHS

DTP–53/118-38